**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | நேசமணி |
| Father's Name/Husband Name: | லாசர் |
| Village : | திருமாந்துறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 74/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சத்துணவு ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார்கள். எதிரிகள் என் வீட்டிற்கு அருகில் தான் குடியிருந்து வருகிறார்கள். 01.03.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் எதிரி சக்திவேல் தானாக பேசிக் கொண்டிருந்தார் அப்போது பிரமோ வெளியே வந்தார். அவரை பார்த்தவுடன் எதிரி சக்திவேல் கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் அ.சா.1ஐ போக சொல்லிவிட்டு வீட்டிற்கு போய்விட்டேன்.

அன்று மாலை 05.00 மணியளவில் நான் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது வெளியே சென்றிருந்த அ.சா.2 திரும்ப வீட்டிற்கு வரும்போது எதிரி சக்திவேல் அவரிடம் பிரச்சனை செய்து கெட்ட வார்த்தையால் பேசி அவரை கீழே தள்ளிவிட்டார். எதிரி சக்திவேலின் மனைவி ரேவதி அ.சா.2ன் இடது காலிலும்,

தாவாக்கட்டையிலும் கட்டையால் அடித்தார். அ.சா.1 எதிரிகளிடம் எதற்காக இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அ.சா.1ஐ கீழே தள்ளி எதிரி சக்திவேல் அவருடைய முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அவர்மீது உட்கார்ந்து அவருடைய வலது கையில் கடித்து விட்டார்.

வலி தாங்க முடியாமல் அ.சா.1 கத்தியவுடன் அருகிலிருந்த நானும், காசிநாதன் மற்றும் சிலர் ஓடி வந்து அ.சா.1யையும், அ.சா.2யையும் தூக்கி விட்டோம். எதிரி சக்திவேல் கையில் வைத்திருந்த அருவாளை காட்டி என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அ.சா.1 மற்றும் அ.சா.2யை மிரட்டினார். அதன்பிறகு அவருடைய மகன் பிரபாகரனுக்கு போன் மூலம் அருகிலிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள், தகவல் தெரிந்து அவர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். போலிசார் என்னை விசாரித்தனர்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.